No.967/ED/SE-HoD/P&M/F.22 /2023-24
GOVERNMENT OF PUDUCHERRY
ELECTRICITY DEPARTMENT

Puducherry, dt.18 /12/2023

To

1. The Editor,
Dinamalar/Dinathanthi/Dinakaran/
Dinamani.

2. The Editor,
Malai Malar,
Puducherry.

COMPUTER CENTRE
ELECTRICITY DEPARTMENT
PONDICHERRY.
No. 1052
Date. 18/12/2023.

Sir,

Sub: Electricity Department - Superintending Engineer-cum-HoD/P&M – Press Notice regarding appeal to public – Regarding.

******

I enclose an appeal to public of Puducherry regarding fixing of new meters in agricultural services. It is requested that the same may please be published as news item/announcement for the information of the public.

Yours faithfully,

T. Chanemougam

8/9

(T. CHANEMOUGAM)
SUPERINTENDING ENGINEER-cum-HoD

Copy to:

1. The Superintending Engineer- O&M/Puducherry region/MP & Outlying regions,
   Electricity Department,
   Puducherry.

2. The Assistant Engineer/Computer,- to display the notice in the dept's website.
   Electricity Department,
   Puducherry.

**மின்துறை**
**புதுவை அரசு**

**செய்தி குறிப்பு**

புதுச்சேரி மின்துறையானது விவசாய நிலங்களில் பழுதடைந்துள்ள பழைய மின்மீட்டர் கொண்ட இணைப்புகளுக்கு புதிய மீட்டர் பொருத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் மின்சார தணிக்கை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு விவசாய மின் இணைப்புகளில் இயங்காமல் உள்ள மின்மீட்டர்களை மாற்றும் பணி நடைபெற்றுவருகிறது. இதன்மூலம் விவசாய இணைப்புகளின் மின்சாரத் தேவை மற்றும் உபயோகம் மிகவும் சரியாக கணக்கிடப்படும். மேலும், விவசாய மின் மோட்டார்களின் நுகர்வு துல்லியமாக கணக்கெடுப்பதன் மூலம் மற்ற பிரிவுகளில் உள்ள மின் திருட்டு மற்றும் மின் விரயம் இவற்றை கணக்கெடுக்க ஏதுவாக இருக்கும். மின்சார பகிர்மானத்தின் உண்மைத்தன்மை இதன்மூலம் வலுப்படும். மின்பகிர்மானத்தை முறைப்படுத்துதல், மேம்படுத்துதல், மின் இழப்பை குறைத்தல், மின்சார கட்டணத்தை நெறிப்படுத்துதல், நுகர்வோருக்கு மின் கட்டண சுமையை குறைத்தல் ஆகியவை இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

தற்போது விவசாய மின் மோட்டார்களின் சராசரி (average) யூனிட்ஸ் நுகர்வு கணக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும் அளவு ஒருவேளை சரியான அளவை (Actual) விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கக்கூடும். மின் மீட்டர் பொருத்துவதன் மூலம் விவசாய இணைப்புகளின் மொத்த மின் நுகர்வு (யூனிட்ஸ்) சரியாக கணக்கெடுக்கப்பட்டு அதற்கேற்ப சம்மந்தப்பட்ட மின்மாற்றிகளையும், மின்கடத்திகளையும், மேம்படுத்தவோ அல்லது கூடுதலாக அமைக்கவோ திட்டமிடப்படும்.

விவசாயிகளுக்கு புதியதாக மீட்டர் பொருத்தப்பட்ட பிறகும் தடையற்ற விலையில்லா மின்சாரம் விவசாய மின் இணைப்புகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும். எனவே, விவசாய மின் இணைப்புகளுக்கு புதிய மீட்டர் பொருத்துவதற்கும், விவசாய மின்சார மானியம் வழங்கப்படுவதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ஆகையால் புதுவை யூனியன் பிரதேசத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் இது குறித்து பீதியடைய தேவையில்லை என்றும் மீட்டர் பொருத்தவரும் மின்துறை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இது குறித்து எந்த சந்தேகம் இருந்தாலும், அருகில் உள்ள மின்துறை அலுவலகத்தையோ அல்லது சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் அலுவலகத்தையோ அணுகி கூடுதல் விவரங்களை பெறலாம் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

T-Chanmugam

(த. சண்முகம்)
கண்காணிப்பு பொறியாளர் மற்றும் துறைத்தலைவர்